1994 நவம்பர் 10]

பணியாளர்கள் அங்கேயே தங்க வேண்டும். ஒரு வேளை அரசாங்கம் குவார்ட்டர்ஸ் கொடுக்கவில்லை என்றால் எட்டு கிலோ மீட்டர் சுற்றளவிலே அவர்கள் தங்க வேண்டுமென்ற விதிமுறை இருக்கிறது. எனவே,அந்த விதிமுறைகேற்ப தங்க வேண்டுமென்று அறிவுறுத்தப்படும். நிதிநிலைமையை மனத்திலே கொண்டு இதற்குக் குவார்ட்டர்ஸ் கட்டுவதா, இல்லையா என்பதைப்பற்றி ஆய்வு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 83, டாக்டர் க. கோபால், இருக்கையில் இல்லை.

வினா எண் 84, டாக்டர் எம். மோசஸ் மற்றும் திரு. ஆ. பாலையா. டாக்டர் எம். மோசஸ் இருக்கையில் இல்லை. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

84—

நாகர்கோவில் நகராட்சிக்கு நேசமணி போக்குவரத்துக் கழகம் வழங்க வேண்டிய தொகை

24920--டாக்டர் எம். மோசஸ் :

திரு. ஆ. பாலையா :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கி வரும் நேசமணி போக்குவரத்துக் கழக நிர்வாகம், நாகர்கோவில் நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையங்களை உபயோகித்த வகையில் தொகை அளிக்க வேண்டியுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அத்தொகையினை வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நாகர்கோவில் நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தை நேசமணி போக்குவரத்துக் கழகம் உபயோகித்ததற்கான பேருந்துக் கட்டணம் செலுத்தவதில் உள்ள நிலுவைத் தொகை குறித்து 23.2.94-ம் நாள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் விவாதித்து முடிவு எடுக்கப்பட்டு, தற்பொழுது நேசமணி போக்குவரத்துக் கழகத்தால் பேருந்து நிலையக் கட்டண நிலுவைத் தொகை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1994 நவம்பர் 10

திரு. ஆ. பாலையா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாகர்கோவில் நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தை நேசமணி போக்குவரத்துக் கழகம் பயன்படுத்துவதிலே இதுவரையிலும் எவ்வளவு தொகை நகராட்சிக்கு வழங்க வேண்டும்? அது எப்பொழுது வழங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மொத்தத் தொகை 1975-வது ஆண்டிலேயிருந்து இதுவரையிலும், ரூ. 10 இலட்சத்து 52 ஆயிரத்து 40 ரூபாய் வழங்கப்பட வேண்டும். அதில் நேசமணி போக்குவரத்துக் கழகத்தால் இன்றைய தேதி வரையிலும் 4 இலட்சத்து 41ஆயிரத்து 518 ரூபாய் வழங்கப்பட்டு இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையிலே இந்தக் கூட்டம் நடைபெற்ற காரணத்தினாலேயேதான் நெகோஷியேஷன் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிவுரையின் பேரில் 31.7.1994-ஆம் தேதி 1 இலட்சத்து 90 ஆயிரத்து 639 ரூபாய் மீண்டும் அவர்களுக்குச் செலுத்தப்பட்டிருக்கிறது. மீதமுள்ள தொகையைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையிலே நகராட்சி ஆணையரும், அங்கே நிர்வாக இயக்குநரும் பேசி அதற்குப் பிறகு நல்ல முடிவினை மேற்கொள்ளுவார்கள்.

திரு. ஆ. பாலையா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேசமணி போக்குவரத்துக் கழகத்தினால் நாகர்கோவில் நகராட்சிக்கு வழங்கக்கூடிய அந்தக் கட்டணங்கள் இனி வருங்காலத்திலாவது காலதாமதமின்றிக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கையெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பேருந்து உரிமையாளர்கள் நகராட்சிக்குக் கொடுக்கிற அந்தத் தொகையை 2 ரூபாயிலிருந்து 4 ரூபாயாக உயர்த்தினார்கள். அதன் அடிப்படையிலே வழக்கு மன்றத்திலே சென்று வழக்கு போட்ட காரணத்தினால்தான், 2 ரூபாயை, 4 ரூபாய் என்று நகராட்சி வைத்துக்கொண்டிருக்கிறது. ஆகவேதான், அதற்கு 'நெகோஷியேஷன்' நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். அந்தக் குறைபாடுகள் இல்லாமல், அனைத்து நகராட்சிகளுக்கும், போக்குவரத்துக் கழகம் சரியாகவே அந்தத் தொகையைச் செலுத்திக் கொண்டிருக்கிறது.

1994 நவம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 85, திரு. சஞ்சய் ராமசாமி, இருக்கையில் இல்லை; அவருக்குப் பதிலாக திரு. இரா. தாமரைக்கனி கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

85—

விருதுநகர்—மதுரை வழித்தடத்தில் பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை இயக்குதல்

***35632—திரு. சஞ்சய் ராமசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரிலிருந்து மதுரைக்கு இயக்கப்பட்ட பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளின் வழித்தடம் நீட்டிக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் மதுரை செல்ல சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வழித்தடத்தைக் குறுக்கி மீண்டும் விருதுநகரிலிருந்து மதுரைக்குப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் மதுரை-விருதுநகர் என்று இயக்கப்பட்டு வந்த சில பேருந்துகள் தற்போது கோவில்பட்டிவரை நீட்டித்து இயக்கப்படுகிறது. இதனால் பயணிகளுக்கு சிரமம் ஏற்படாவண்ணம் நாள் ஒன்றுக்கு 680 தனி நடைகள் மதுரையிலிருந்து விருதுநகர் வழியாக இயக்கப்படுகின்றன. இதுவே போதுமானதாகும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர், மாவட்டத்தின் தலைநகராக இருக்கிற காரணத்தினால், விருதுநகரிலிருந்து மதுரைக்குப் போவதற்கு பஸ்கள் போதுமானதாக இருந்தாலும், இன்னும் அதிக பஸ்கள் விடப்படுமா? இப்போது, பஸ்கள் பழைய பேருந்து நிலையத்திலிருந்து போகின்றனவா, புதிய பேருந்து நிலையத்திலிருந்து போகின்றனவா என்று தெரியவில்லை. புதிய பேருந்து நிலையத்திலிருந்து அவை செல்லுமாறு, போக்குவரத்துத் துறை அமைச்சர், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட